# இடம்பெயர்ந்த மக்களை தேடிசென்று பணிபுரிந்தவர்

## வெள்ளிவிழா வைபவத்தில்பாராட்டு

குருநகர், டிச. 22

வண: பி. எம். இம்மானுவேல் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழா வைபவம் நேற்று குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

வெள்ளிவிழா நாயகர் யாகப்பர் மண்டபத்தில் இருந்து ஆலய முன்றலுக்கு மங்கள இசை முழங்க அழைத்து வரப்பட்டார். அப்போது பங்கு மக்கள் பெரும் மகிழ்ச்சியுடன் மலர் மாலைகளை அணிவித்தனர்.

அடிகளாரின் சேவைகளை பலரும் நன்றியுடன் பாராட்டிப் பேசினர்.

இராணுவ நடவடிக்கை உச்ச கட்டத்தை அடைந்திருந்த வேளையில் அடிகளார் குருமனையை விட்டு வெளியேறாது, இடம்பெயர்ந்த மக்களைத் தேடிச் சென்று சேவை புரிந்ததை பங்கு மக்கள் நினைவு கூர்ந்தனர்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [ஜ-51

# வவுனியாவுக்கு 'டெலக்ஸ்' வசதி

வவுனியா, டிச. 22

நீண்ட கால இடைவெளிக்குப் பின் வவுனியா தபால் நிலையத்தில் ''டெலக்ஸ்'' இயந்திரம் செயற்படத் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வெளியிடங்களுக்கான தந்திகள் உடனுக்குடன் அனுப்பும் வசதிகள் ஏற்பட்டுள்ளதாக தபால் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா அரச அதிபரின் செயலகத்துக்கும் இலங்கை வங்கிக் கிளைக்கும் ''வக்ஸ்'' (Fax) வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றிற்கும் ''வக்ஸ்'' வசதி ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

விரைவில் வவுனியாவிலிருந்து வெளிநாட்டு தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்த வாய்ப்புக் கிடைக்கும் என்று அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். [ஈ-த]

# சூழல் சுகாதாரத்தைப் பேண மக்களின் ஒத்துழைப்பு தேவை

## விடுதலைப் புலிகள் பிரசுரம் மூலம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 22

நாளை முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை சூழல் சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த வாரத்தில் தமிழீழ மக்கள் சூழல் சுகாதாரத்தை பேணும் வகையில் தமது சூழலை துப்புரவாக்கி, கழிவுப் பொருட்களை அகற்றி நோய்களை உருவாக்கும் ஈனுளம்பு வகைகளை அழிக்கும் தொழிற்க முன்வருமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு கேட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பிரிவினர் வெளியிட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்றைய சூழ்நிலையில் எமது மக்கள் சிங்கள பௌத்த பேரினவாத அரசினால் தோற்றுவிக்கப்பட்ட பல இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதேசமயம், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமலும், ஆரோக்கியத்தை இழந்தும், நோய் வாய்ப்பட்டும் பல குடும்பங்கள் சொல்லொணா வேதனையுடன் வாழ்கிறோம்.

சூழல் மாசடைவதற்கும், நெருப்புக் காய்ச்சல், செங்கமாரி, மஞ்சட் காமாலை, வயிற்றுளைவு, வயிற்றோட்டம் போன்ற கொடிய தொற்று நோய்கள் பரவுவதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

கடந்த இரு மாதங்களாக நெருப்புக் காய்ச்சல், மஞ்சட் காமாலை, வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பன்மடங்கு அதிகரித்திருப்பதையும், அதன் நிமித்தம் அனாவசிய மரணங்கள் ஏற்பட்டிருப்பதையும் நம்மில் பலர் அறிவோம்.

இத் தொற்றுநோய்களும், அதன் விளைவுகளும், பாதிப்புகளும் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டியவை. இவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும். மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்வும் அளிக்க முடியும்.

இந்த நல்ல நோக்கத்தை அடையவும், வெற்றி கொள்ளவும் ஒவ்வொரு தனிநபரதும், பொது ஸ்தாபனங்களினதும், பூரண நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் சூழல் சுகாதார அறிவும் புரிந்துணர்வும் பங்களிப்பும் அவசியம்.

அந்த வகையில்தான் சூழல் சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5-15)

# உதவிகளையும் மனித உரிமைகளையும் தொடர்புபடுத்தச் சில சக்திகள் முயற்சி

## சார்க் மாநாட்டில் பிரேமதாசா கவலை தெரிவிப்பு

கொழும்பு, டிச. 22

வெளிநாடுகள் அளிக்கும் உதவிக்கு நாம் என்றும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் உதவிக்கும் மனித உரிமைகளைப் பேணும் விடயத்துக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துவது கவலை தரும் போக்காக இருக்கிறது.

சார்க் அமைப்பின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் உரையாற்றிய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா இப்படித் தெரிவித்தார்.

உதவி வழங்குவதற்கும் மனித உரிமைக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துவது போன்ற போலித்தனமான அறக்கோட்பாடுகள் மூலம் சிலர் புதிய காலனி ஆதிக்கம் செலுத்த முயல்கிறார்கள்.

உலகெங்கும் சுதந்திர அலை வீசத் தொடங்கியுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் சார்க் உச்சி மாநாடு நடத்தப்படுவது விசேட கவனத்திற்குரியது.

அரசியல், பொருளாதார மற்றும் கலாசார அமைப்புகளின் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலைக்குள் சார்க் நாடுகள் ஒரு பொதுவான இலட்சியத்தை நோக்கி முன்னேற வேண்டியுள்ளது.

முனைப்பான உற்சாகத்துடன் நெருங்கிய ஒத்துழைப்பை மேற்கொள்வதன் மூலம் அச்சுறுத்தல்களையும் ஆபத்துகளையும் அகற்றி இந்தப் பிராந்திய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

பயங்கரவாதம் மற்றும் போதைப் பொருள் பாவனை ஆகிய இரண்டு கொடிய நோய்களை ஒழித்துக் கட்டுவதற்கான கூட்டு முயற்சி படிப்படியாக பலனளித்து வருகின்றது என்றும் திரு. பிரேமதாஸா சொன்னார்.

பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான பிராந்திய உடன்படிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உறுதியான அத்திவாரமிடப்பட்டிருக்கிறது — என்று அவர் தெரிவித்தார். (அ-எ-5)

# நரசிம்மராவ் இரும்பினார்

கொழும்பு, டிச 22

ஒருநாள் சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கொழும்பு வந்திருந்த இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் நேற்றிரவு இங்கிருந்து பம்பாய் புறப்பட்டுச் சென்றார்.

பிரதமர் டி. பி. விஜேயதுங்கவும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் கொழும்பு விமான நிலையத்தில் வைத்து அவருக்குப் பிரியாவிடை கூறி வழியனுப்பி வைத்தனர். [ஓ-5]

# ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ். கோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழ் பணியாற்றும் — சங்கீத, நடனம், டிப்ளோமா பட்டத்துடன் நியமனம் பெற்ற — ஆசிரியர்களை பட்டதாரி சம்பள விகிதத்தில் அமர்த்தவும் — ஆசிரிய சேவைக்கு முன்பும் பின்பும் பட்டதாரியான ஆசிரியர்களுக்கு விசேடபடி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய ஒரு கலந்துரையாடலுக்காக பட்டதாரி ஆசிரியர்கள் தமது அத்தாட்சிப் பத்திரத்துடன் நாளை காலை 9 மணிக்கு யாழ். கோட்டக் காரியாலயத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். [உ-5]

# பன்றி தாக்கி வயோதிபர் படுகாயம்

வயலுக்குச் சென்ற வயோதிபர் வீதியில் எதிர்கொண்ட பன்றியால் தாக்கப்பட்டு இப் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பன்றி தாக்கியதால் இவரது இடதுகை துண்டிக்கப்பட்டுள்ளது. வலது கால் தொடை முறிந்துள்ளது. மேலும் அவரது வயிற்றுப் பகுதி கிழிக்கப்பட்டுள்ளது.

வரணி யற்றாலையில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் யற்றாலையைச் சேர்ந்த சின்னக்குட்டி சந்திரசா (வயது 70) என்ற வயோதிபரே படுகாயமடைந்தவராவார். [உ-15]

# மண்ணெண்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விலை நேற்று முதல் அமுலுக்கு வருவதாகவும் அரச அதிபரின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேசமயம் சில இடங்களில் நேற்று மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 55 ரூபாவுக்கும் கூடுதலான விலைகளில் விற்கப்பட்டதாகவும் —

சில ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் கூட ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் நேற்று 40 ரூபாவுக்கு விற்கப்பட்டதாகவும் எமது செய்தியாளர் [...]


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பிரமணியம் தியாகராசா

[உமா ரேடியோ சென்டர் பங்காளர், கொழும்பு]

தோற்றம் : 22 - 12 - 1946

மறைவு : 10 - 11 - 1990

மறைந்த இடமும் தெரியவில்லை மனதால்
மறக்கவும் முடியவில்லை அப்பா
மரணித்தும் ஓர் ஆண்டு மறைந்துவிட்டது — மனதில்
மலர்ந்திருக்கின்றீர்கள் தியாக தீபமாய்

உடலால் உங்களைப் பிரிந்திருந்தாலும்
உள்ளத்தால் ஒன்றியிருக்கும்
பிறந்த நாளான இன்று நினைவு கூரும்,

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்

82/5, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(19156)



# 31வது நாள் நினைவஞ்சலி



தோற்றம் : 31-12-1931

மறைவு : 22-11-1991

அமரர் V. மாரிமுத்து

நீண்ட நின் உருவும் நிர்மலமான உம் வதனமும்
நித்தம் எம் நினைவுகளைத் தொட்டிங்கு இழுக்குதையா
வெள்ளை உடுப்புடன் கள்ளமில்லாமல் நீ
எடுத்த கொள்கைகளை நெறிப்படுத்தி நின்றாயையா
பாச பூமியை விட்டெங்கு சென்றாலும்
உற்றார் உறவினர் நாம் உருகுகிறோம்
உன் ஆத்ம சாந்திக்கு

மனைவி, மக்கள், மருமகன், உறவினர்.

தவிஞனம்,
கொடிகாமம்.

(190..)



# பாரதி கல்வி நிலையம்

சித்தன்கேணி.

## A/L - 93

ஆரம்பம்: 23 - 12 - 1991 திங்கள் 3 மணி

| | | |
|---|---|---|
| இரசாயனவியல் | — | திரு. D S. சோதி B. Sc. |
| பௌதிகவியல் | — | திரு. T சண்முகலிங்கம் B. Sc. |
| விலங்கியல் | — | திரு. விக்னேஸ்வரன் B. Sc |
| தாவரவியல் | — | திரு. சதீஸ்குமார் B. Sc. |
| தூய / பிரயோக கணிதம் | — | திரு. கிருஸ்ணா B. Sc. |

★ A/L 92, 91 வினா-விடை நடைபெறுகிறது.

ஆண்டு 11, 10, 9 நடைபெறுகின்றன

எமது வழமையான ஆசிரியர் குழு.

(4441)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட தரமான கோழித்தீன் விற்பனைக்குண்டு. கிலோ 28/- மட்டுமே. இலா மில், 4ம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (19085)

முட்டை இடும் கோழிக்குரிய கோழித்தீன் விற்பனைக்கு உண்டு. சாயி கொமிக்ஸ், 187, அர்ச்சுனா வீதி (ஸ்ரான்லி வீதி). யாழ்ப்பாணம். (4449)

வான் கோழி முட்டைகள், இரா வாழைக்குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். 19, மூருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (19098)

சகல இன றேடியோ, T V. டெக் திருத்திக் கொடுக்கப்படும்: இவற்றுக்குத் தேவையான I. C. ரான்சிஸ்ரர் உதிரிப்பாகங்கள் மலிவாக கிடைக்கும். Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (றெயில்வே கடவை அருகாமை மேல் மாடி) (19091)

## நீமியா உரம்

நெல், வாழை மற்றும் தோட்டப் பயிர்களுக்கு உரமாகவும், பயிர்களைத் தாக்கும் பூச்சி, புழுக்கள் நோய்களிலிருந்து பாதுகாக்கவும் உதவுகிறது "நீமியா உரம்". நல்லூர் சமநல சேவை நிலையத்திலும் விற்பனையாகிறது. "மிக்வைற்" (சி/1134)

## செவ்வாய் மாற்றம்

ரூபா. 7/- வெள்ளிதெசை பால் பிரேமதாசா ஆயுட்காலப் பதவியும், சிட்டமதுப் புதன் தெசையால் ஸ்ரீமாவின் அரசியல் அஸ்தமனமும், நீசச் செவ்வாய் தெசையால் ஜெயலலிதாவின் பதவி ஆட்டமும், வியாழ சாயினத்தால் கோர்பச்சேவ் ராஜினாமாவும் ஏற்படும். (நூலாசிரியர் Prof சத்தியதாசன்) ஸ்ரீகாந்தா, தங்கமிஸ் நல்லூர். (4450)

ECALOM
மனோகராச் சந்தி.
A/L-92
பொருளியல்
— உதயன்
பகுதி I பணம்
பகுதி II செல்மதி-நிலுவை
ஆரம்பம்:
23 - 12 1991
காலை 6-00 மணி
(சி-1211)

C. C. A.
யாழ்ப்பாணம்.
கிறிஸ்தவ நாகரிகம்
கொலின்ஸ்
1991 வினா-விடை
1992, 1993
புதிய பிரிவு
ஆரம்பம:
23-12-1991
திங்கள் 8.00 மணி
(சி-1208)

# மலிவு விற்பனை

புங்குடுதீவில் இயங்கி வந்த நேசன் கடை அன்ட் ரெக்ஸ்ரைல் ஸ்தாபனம் இப்போது தற்காலிகமாக, 23. நாயன்மார் வீதி, நல்லூர் (கச்சேரி - நல்லூர் குறுக்கு வீதி முத்திரைச் சந்தி அருகாமை) எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. என்பதை வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் அறியத்தருகிறோம் சகல விதமான புடவை வகைகளும், எவர்சில்வர் பொருள்களும், பன்இப் பொருள்களும், நத்தார், புதுவருட, தைப்பொங்கல் தினங்களுக்காக மலிவு விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படுகின்றன.

எஸ். நேசன்,
23, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(4447)


# சகல மரியாதைகளுடனும் "கோர்பி" பதவி விலகுவார்

## இப்படிச் சொல்கிறார் யெல்ட்சின்

மாஸ்கோ, டிச. 22 சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் சகல மரியாதைகளுடனும் பதவியிலிருந்து விலகுவார் என்று ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சின் தெரிவித்தார்.

ரோமாபுரியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று கஸகிஸ்தானில் நடைபெற இருக்கும் முன்னைய சோவியத் குடியரசுகளின் உச்சி மாநாட்டின் போது திரு. கோர்பச்சேவ்வின் கூறு பற்றி ஆராயப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)


# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKODDAI

வட்டுக்கோட்டையிலும், யாழ்ப்பாணத்திலும் முழுநேர தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் 20 - 01 - 1992 இல் ஆரம்பமாகின்றன.

### வட்டுக்கோட்டையில் நடத்தப்படும் பயிற்சி நெறிகள்:

**1. Technician Diploma Course**
(ஆங்கில மூலம்)
N. D T. தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.
(i) Civil Engineering
கல்வித் தகைமை:
G. C E. (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.
காலம்: 2 வருடங்கள்

**2. Diploma Courses**
(ஆங்கில மூலம்)
(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data Processing (BASIC, COBOL & d BASE III +) Practical on IBM — PC — AT & MAT 386 Industrial Controller
கல்வித் தகைமை:
G C E (O/L) கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி
காலம்: ஒரு வருடம்
(iii) Advanced Diploma in Computing (ஆங்கில மூலம்)
Syllabus Includes British Computer Society (B C S) part I and Australian Computer Society (A C S) Examination.
Qualification:
G. C. E (O/L) 5 Subjects including Maths English & G. C E (A/L) one Subject
Duration: One Year

**3. Engineering Course**
(6 Semesters)
Full time Preparing Students for E. C. E. Part I (London) Exam & I E S L. - Part I Exam.
Qualification:
G. C. E. (A/L) Maths With 3 or 4 Passes In two Sittings

**4. Tech. Certificate Course**
(ஆங்கில மூலம்)
(i) Radio & T. V. Servicing
கல்வித் தகைமை:
G. C. E. (O/L) with Maths & Science
காலம்: ஒரு வருடம்

### யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் பயிற்சி நெறிகள்:

**1. Technician Diploma Course**
(ஆங்கில மூலம்)
N D T தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.
(i) Civil Engineering
கல்வித் தகைமை:
G. C. E (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.
காலம்: 2 வருடங்கள்

**2. Diploma Courses**
(ஆங்கில மூலம்)
(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data Processing (BASIC, COBOL & d BASE III +) Practical on IBM - PC, AT & MAT 386 Industrial Controller.
கல்வித்தகைமை:
G. C. E. (O/L) கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.
காலம்: ஒரு வருடம்

**3. Engineering Course**
(6 Semesters)
Full time Preparing Students for E. C. E. part I, (London) Exam & I. E. S. L. Part I Exam.
Qualification:
G. C E (A/L) Maths with 3 or 4 passes in two Sittings.

**5. Craft Certificate Courses**
(தமிழ் மூலம்)
(i) இயந்திரசாலைப் பயிற்சி (Machine shop Practice)
காலம்: ஒரு வருடம்
(ii) பொருத்துனர் பயிற்சி (Fitters Practice)
(iii) ஒட்டுனர், கட்டுமானம் பொருத்துனர் பயிற்சி. (Welding; Fabrication and Fitting)
கல்வித் தகைமை:
G. C. E. (O/L) வரை படித்திருத்தல் வேண்டும்;
காலம்: 6 மாதங்கள்

போதியளவு தகுதிவாய்ந்த மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரம் இப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

முக்கிய குறிப்பு: விண்ணப்பப் படிவம் விலை ரூபா. 10/-
பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்கள்:
(a) J. C. I. T. அலுவலகம், வட்டுக்கோட்டை.
(b) ACD புத்தகசாலை, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பப்படிவங்களை 10-01-1992 காலை 10-00 மணிக்கு முன்னர் J C I T. அலுவலகம், வட்டுக்கோட்டையில் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

நேர்முகப் பரீட்சை J. C. I. T. அலுவலகம், வட்டுக்கோட்டையில் 13-01-1992 காலை 9.00 மணிக்கு நடைபெறும். சகல விண்ணப்பதாரர்களும் இந் நேர்முகப் பரீட்சைக்கு கல்விச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.


SELECTION AFTER INTERVIEW

- பணிப்பாளர்.

(சி-1186)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன்னுத்துரை புவனேந்திரன்**
(இளைப்பாறிய ஆசிரியர்)

உதயத்தில்: 07 - 03 - 1929 இதயத்தில்: 12 - 01 - 1990

திதி: 22 — 12 — 1991

வேதங்கள் அறிந்து நின்ற எம் - தந்தையே! நின்
பாதங்கள் பற்றிப் பலனாதம் வந்து விட்டோம்
பேதங்கள் அகற்றிட்ட பெரியோனே உன் நினைவு
காதங்கள் கடந்தாலும் கண்ணீரில் கரைகிறது
ஓதுதற்கே எந்நெமக்கு ஒளிதந்த நீயும் போய்
வருடங்கள் இரண்டு மாயமாய் மறைகிறது
ஆதங்க முடநாமும் இரண்டாண்டுப் பூர்த்திக்கு
சரிதங்கள் படைக்கின்றோம் சாந்தமாயேற்றிடுக;

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வல்லியசிங்கம் வீதி, தாவடி. (4437)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 2 — 7 — 1924



உதிர்வு: 23 — 11 — 1991

**திருமதி நாகலிங்கம் பூமணி**
(இளைப்பாறிய யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்)

நல்லதொரு தாயாய் - என்றும்
நற்சிந்தனையே கூறிடுவீரே
இனி யார் எமக்கு புத்திமதி கூற உளரோ?
இராப்பகலாய் உழைத்து எமை வளர்த்திட
நீங்கள் பட்ட பாடோ எத்தனை! எத்தனை!
அம்மணி! போச்சுதே எங்கள் இன்பம்
புலம்புகின்றோம் அந்தோ நாம்.

நாளை 23-12-1991 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

11. மடுக்கரையடி லேன்,
நல்லூர். (19194)

## குருத்துவ வெள்ளி விழா

யாழ்ப்பாணம், டிச. 22
சுன்னாகம் பங்குத்தந்தை அருட்திரு சா. மரியதாஸ் செல்வரட்ணம் (அ. ம. தி) அவர்களின் குருத்துவ வெள்ளி விழாவை அவரது பிறப்பிடமாகிய கரவெட்டியில் பங்கு மக்கள் சிறப்பாக 23 ஆம் திகதி கொண்டாடுகின்றனர். அன்று கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நன்றித் திருப்பலியும் வாழ்த்து உபசரணையும் நடைபெறும். (ஓ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிச. 22
தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியத்தின் அனைத்துக் கோட்ட நிர்வாகப் பொறுப்பாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது. (உ-த)

## அடுத்த சார்க் பங்களாதேஷில்

கொழும்பு, டிச. 22
ஏழாவது சார்க் உச்சி மாநாடு 1992ஆம் ஆண்டில் பங்களாதேஷ் நகர தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ளது.
இது தொடர்பான முடிவை சார்க் நாடுகளின் தலைவர்கள் நேற்று ஆறாவது சார்க் மாநாட்டின் முடிவில் ஏகமனதாக எடுத்தனர். (உ-எ)

## கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 22
யாழ். மாவட்ட ப. நோ. கூ. சமாசத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான அவசர கூட்டம் ஒன்று இன்று (ஞாயிறு) முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ப. நோ. கூ. ச. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)

## சுவர் விழுந்து கால் முறிவு

யாழ்ப்பாணம், டிச. 22
விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி வெடித்திருந்த மதில் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் அகப்பட்டு சிறுவன் ஒருவன் வலது கால் முறிந்த நிலையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான்.
கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ராஜவராசா சதானந்தன் (வயது 11) என்ற சிறுவனே பாதிப்புற்றான். (த-15)

## சகல,

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)
குறிப்பிட்ட இக் கூட்டத்தில் 69 வருடங்களாக இயங்கி வந்த சோவியத் யூனியனை சுதந்திர நாடுகள் அடங்கிய பொதுநல அமைப்பாக மாற்றும் பணிகள் பற்றி குடியரசு தலைவர்கள் ஆராய்வார்கள்.
இந்தக் கூட்டத்திற்கு திரு. கோர்பச்சேவ் அழைக்கப்படவில்லை என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (த)

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

6 ஆம் ஆண்டு அனுமதிக்கான
முன்னோடிப் பரீட்சை

புதன்கிழமை
(25 - 12 - 1991) 10 மணி

— நிர்வாகி.

(இ-1216)

## தென்னிந்தியத் திருச்சபை

யாழ். பேராயம்

இடம்பெயர்ந்த அங்கத்தவர்களுக்கான

**கிறிஸ்மஸ் இசையாராதனை**

கிறிஸ்மஸ் புதுவருட நிகழ்ச்சிகள்

இடம்: திருமறை இல்லம்
182, 1 ஆம் குறுக்குத் தெரு,
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

நேரம்: 24 - 12 - 91 செவ்வாய்
மாலை 4 - 00

25 - 12 - 91 } காலை 8-30 மணி
01 - 01 - 92 } திருவிருந்து வழிபாடு

நடத்துபவர்: அருட்திரு. D.C. இரத்தினசிங்கம்

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

அருட்திரு. அ. ஜெயக்குமாரன்,
செயலாளர்,
யாழ். தென்னிந்தியத் திருச்சபை.

(இ-1217)

## மருத்துவ பட்டப் படிப்பு D. H. M. S.

(Doctor in Homoeopathic Medicine and Surgery)
(ஜேர்மன் மருத்துவம்)

- ★ க.பொ.த. (உயர்தரம்) 4 விஞ்ஞான பாடங்களில் சித்தி
- ★ காலம் 4 வருடங்கள்
- ★ மருத்துவசங்கத்தால் அனுமதிக்கப்பட்ட 'டாக்டர்' பட்டமும், தொழில் அனுமதியும்
- ★ சர்வதேசம் முழுவதும் தொழில் புரியக்கூடிய பட்டம்.
- ★ பிரித்தானிய அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத்துறை (Royal Medicine)
- ★ தமிழீழ மருத்துவத் துறையான 'வர்மசிகிச்சை' முறையும் பாடத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- ★ தமிழீழத்தின் தனிப்பெரும் மருத்துவ கல்லூரிகளினால் விரிவுரைகள்.
- ★ மாவீரர், போராளிகள் குடும்பத்தினர்களுக்கு இலவசக் கல்வி
- ★ விண்ணப்ப முடிவு திகதி: 19-1-1992

விண்ணப்பங்களையும், விவரங்களையும் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு:
Dr. V. P. சுந்தரராஜன்
அதிபர்
**சாயி மருத்துவக் கல்லூரி,**
இல 6, பருத்தித்துறை வீதி (1 ஆம் ஒழுங்கை),
(மார்க்கட் அருகில்)
யாழ்ப்பாணம். (4446)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 31 - 05 - 1985



ஆண்டவன் அடியில்: 22 - 12 - 1990

செல்வன்
**தனபாலசிங்கம் பிருந்தன்**

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை உன் நினைவு
பிருந்தா உன் வதனம்
நிழலாகப் படர்கிறது
மீளா உன் நினைவுடனே
மனமுருகி நிற்கின்றோம்.

உன் நினைவால் வாடும்:
அப்பா, அம்மா, அன்பு அக்கா,
உற்றார், உறவினர்கள்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி,
4, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி-1141)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் கமலநாதன்

[வடக்கு, கிழக்கு மாகாணசபை இணைப்பதிகாரி, முன்னைநாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வவுனியா]

பொன்னம்பலம் கமலநாதன் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. பொன்னம்பலம், திருமதி பொன்னம்பலம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், இராசம்மா [இளைப்பாறிய தாதி, அரசினர் வைத்திய சாலை, வவுனியா] அவர்களின் அன்புக் கணவரும், துஷ்யந்தி, கிரிசாந்தன், கிரிசங்கர், கிரிதர்ஷன், கிரிசகீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலாதேவி, கமலேஸ்வரன், கமலேந்திரன், கமலேஸ்வரி [அவுஸ்திரேலியா], கமலராணி, கமலாகரன் [பிரான்ஸ்], கமலினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வீரசிங்கம், சந்திரேஸ்வரி, அனுஷியாதேவி, சபானந்தன் [அவுஸ்திரேலியா], தர்மராசா, மாலாதேவி, முரளிதரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல: 28, ஆர்துஷா வீதி, வெள்ளவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் 22-12-91 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:

பொ. கமலேந்திரன் [சகோதரன்]

22, கண்டி வீதி,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(19162)

## வல்லிபுரம் பாலசிங்கம்

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இராசாவின் தோட்டத்தில் வசித்துவருமாகிய வ. பாலசிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் கண்மணியின் அன்பு மகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பொன்னழகன், மெய்யழகன், அருந்ததி, உதயசூரியன், சந்திரசூரியன், சிறீதரன், ராதாகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சதீசமநாதன், அருணாநிதி, பிரியதர்ஷினி, புஸ்பவதா ஆகியோரின் அன்பு மாமனாரும், இராஜசிங்கம், திருச்செல்வம், காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற கனகசபை, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று மாலை கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:

க. அருந்ததி (மகள்)

இராசாவின் தோட்டம்.

(19158)

பண்டத்தரிப்பு

## மூத்தம்மா பொன்னம்பலம்

அரசலி வடக்கைச் சேர்ந்த உடையாரும் நொத்தாரிசுமாகிய சுப்பிரமணியத்தின் மகள் சின்னப்பிள்ளையினதும் அவ்வூர் குடி இராமலிங்கம் நன்னித்தம்பியினதும் இளைய மகள் முத்தம்மா 21 ஆம் திகதி யேசுபதம் அடைந்தார். இவர் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அருமை மனைவியும், காலஞ்சென்ற சகோதரி செல்வரத்தினம், தம்பரத்தினம், புனிதம் [இளைப்பாறிய ஆசிரியை], சுகிர்தம், தங்கமணி [ஆசிரியை], நவரட்ணம் [இளைப்பாறிய பொலிஸ் சார்ஜனும், ஷப்றா உதயன் ஊழியரும்], அரியம் [இளைப்பாறிய ஆசிரியை] ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜசூரியர், காலஞ்சென்ற செல்லத்துரை, செல்லப்பு, கிருபைராஜா, ஜீவமணி, அலெக்ஸ் ராஜரெத்தினம் ஆகியோரின் அருமை மாமியாரும், கிறேஸ் - பெரேரா [U. K.], சுசி [U. K.], ஏமெண்ட் - ரதி [டென்மார்க்], நீல் [மக்கள் வங்கி கொழும்பு], யசோ [ஆசிரியை கொழும்பு], சாளற் தர்மானந்தன், ஏஞ்ஜலின் ஆன்பரி [U. K.] ரஞ்சன் [கனடா] - கமலா, வெட்சி - தயகிறி [ஏமர்லண்டா], சுவா நீர்கொழும்பு - ஆங்கில பயிற்சிக் கலாசாலை], ஜேம்சன் ஞானப் பொன்ராஜ் [சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்], செலினி (U. K.), பரமானந்தம் [வாழைச்சேனை காகித ஆலை], - யோகேஸ்வரி, இன்பஜோதி நித்திராஜ் [உதவி ஆணையாளர் - வட கிழக்கு ஜனசக்தி] - உஷா [ஆசிரியை], ரூபி - காலஞ்சென்ற அருணானந்தன் [பொலிஸ் சார்ஜண்ட்], அருள்ஜோதி சத்தியநேசன் [ஆசிரியர் - கல்கிசை சென்.தோமஸ்] - நிர்மலா [Ceylon Oceans Ltd], அமலநேசன் [இலங்கை வங்கி, திருகோணமலை]. ஆனந்தி - ஞானசவுந்தரம்பேரால் [சாம்பியா] நவஜோதி நேசன் [சுவிஸ்], ஜெகஜோதி (U. K.), எமில் (Indian Oversees B a n k), எமி [ஆசிரியை], எல்சி [ஆசிரியை], எட்னா, ஜெயந்தி [[illegible] திருச்சபை, இருபாலை], அன்ரன், செல்ரன். றேச்சல் [தொழில் நுட்பவியலாளர்], டொறீன் [ஆசிரியை - கொழும்பு], சலோமி - சீலன் [கனடா], பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மார்க்கஸ், கிறிஸ்ரி, அஞ்சலோ, ஜோய், போல், டேவிட், பியலா, விஜயானந்தன், கிருபானந்தன், ஐஷான் ஏனோக், டானியல், எஸ்தர், சாலின், எஸ்தர்எல்லா, ஆகியோரின் ஆசைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இந்துக் கல்லூரி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1.00 மணிக்கு நடைபெற்று பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்;

பொ. நவரட்ணம்

(C/1142)

## 'சாவ்'..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கையில் — 249 வீரர்கள் — பங்கு பெறுகின்றனர்; இந்திய வீரர்கள் 240 பேரும் போட்டிகளில் பங்குபெறுகின்றனர்.

மல்யுத்தம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், நீச்சல், குறிபார்த்துச் சுடுதல், டெனிஸ், டேபிள் டென்னிஸ், பாரம் தூக்குதல், குத்துச்சண்டை ஆகிய பத்து விளையாட்டுகள் இந்தப் போட்டியில் இடம்பெறுகின்றன.

கொழும்பு, பனாகொடை உட்பட தலைநகரிலும் அதை அண்டிய பல்வேறு இடங்களிலும் உள்ள விளையாட்டு திடல்களில் இந்தப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. (உ-த)

## காங்கேசன் மூலம் உணவு:

# இராணுவத்துடன் பேச செஞ். அதிகாரி பலாலிக்கு!

யாழ்ப்பாணம், டிச. 22

காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கப்படும் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு வாகன அணியில் எடுத்து வருவது தொடர்பாக பலாலியில் இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி நேற்று மாலை இங்கிருந்து பலாலிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

முன்னர் அவரது விஜயம் வார இறுதிக்குப் பின்போடப் பட்டிருந்ததாகத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

பலாலிக்கு விஜயம் செய்துள்ள செஞ்சிலுவை அதிகாரி காங்கேசன் துறை மூலம் உணவு தருவித்தல் — மற்றும் தீவுப்பகுதிகளுக்கு செஞ்சிலுவைக் குழு விஜயம் செய்வது ஆகியன குறித்து அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் எனத் தெரிய வந்தது. [உ-ஏ]

## 4 புதிய முத்திரைகள் இன்று வெளியீடு

கொழும்பு, டிச. 21

இன்று ஆரம்பமாகும் ஐந்தாவது 'சாவ்' விளையாட்டுப் போட்டியை ஒட்டி நான்கு புதிய முத்திரைகளை தபால் திணைக்களம் இன்று வெளியிட இருக்கிறது. [உ]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பல்கலைக்கழக அனுமதிகள் 1991/92ஆம் கல்வி ஆண்டு

1990 ஆகஸ்ட், 1991 ஏப்ரல் (விசேட பரீட்சை) இல் நடைபெற்ற க. பொ. த. [உயர்தர] பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் கோரப்படுகின்றது.

1991 ஏப்ரல் மாதம் நடைபெற்ற க. பொ. த. [உயர்தர] விசேட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மொத்தத் திரட்டும் புள்ளி விபரம் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டதன் பின்பு அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொருவரும் விண்ணப்பதாரியும் ரூபா 50/-இனை யாழ். பல்கலைக்கழக நிதியாளர் அலுவலகத்திலோ அல்லது இலங்கை வங்கியில் ஏதாவதொரு கிளையிலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை யாழ். பல்கலைக்கழக தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

காசுக் கட்டளையோ அல்லது தபாற் கட்டளையோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக தேர்வுகளும் அனுமதிகளும் கிளையிலிருந்து 6-1-1992 இற்குப் பின்பு பெற்றுக் கொள்ளலாம். நேரடியாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு விண்ணப்பம் அனுப்பியவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

மேற்படி மாணவர்களுக்கு விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்.

பதிவாளர்

(C/1143)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செபஸ்தி வரவணிக்கம்

மண்டைதீவு 3 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி செபஸ்தி வரவணிக்கம் (தங்கத்தார்) அவர்கள் நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ்சென்ற யோவான் செபஸ்தி அவர்களின் அன்பு மனைவியும் செ. அ. தேவராஜா (இளைப்பாறிய அதிபர்) காலஞ்சென்ற பொன்னபேத்தம்மா, செலஸ்ரீன்பிள்ளை, பேர்னாட் [முன்னைநாள் கிராம சபை உப தலைவர்- மண்டைதீவு], சிப்பிரியான் (பிரான்ஸ்) லில்லி மார்க்சிறப், நீற்றம்மா, றெஜீனா, எட்மன் (வவுனியா) காலஞ்சென்ற ஜெயபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அந்தோனிப்பிள்ளை, அகிலின், யேசுதாசன், அன்ரனி, மேரி மரீத்தினம்மா, லவுறேஞ்சி யாப்பிள்ளை, மேரிகிறேஸ், குயிறா, ராணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இல: 45, ஒடக்கரை வீதி, குருநகரிலிருந்து யாழ். பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு பிற்பகல் 5 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

செ. பேர்னாட் [மகன்]

45, ஒடக்கரை வீதி,
குருநகர்.

(16966)

## திருமதி கார்த்திகேசு அன்னப்பிள்ளை

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் தற்போது லேடிட்டன் றோட் மானிப்பாயில் வசித்தவருமாகிய திருமதி கார்த்திகேசு அன்னப்பிள்ளை 20-12-91 வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற பசறை பிரபல வர்த்தகர் E V. கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும், நாகேந்திரம், சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும், நமசிவாயம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். ஈமக்கிரியைகள்பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர் நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

லேடிட்டன் றோட்,
மானிப்பாய்.

தகவல்:

கு. நமசிவாயம் (மருமகன்)

(19164)

## Dr. சின்னத்தம்பி குலசேகரம்

நல்லூரைச் சேர்ந்த டாக்டர் சின்னத்தம்பி குலசேகரம் (ஓய்வுபெற்ற பிரதிப் பணிப்பாளர் தேயிலை ஆராய்ச்சி நிலையம், தலவாக்கலை) காலமானார். காலஞ்சென்ற பி. இராமநாதன் (அளவையாளர் திணைக்கள முன்னாள் அத்தியட்சகர்), காலஞ்சென்ற திருமதி இராமநாதன் ஆகியோரின் மருமகனும், டாக்டர் திருமதி குமுதினி குலசேகரம் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக்கணவரும், பிரியதர்சினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சுந்தரராஜ் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சக்திவேல் (வல்வெட்டி வடக்கு), திருமதி மகேஸ்வரி பத்மநாயகம் (யூ. கே), திருமதி செல்வராணி தங்கரத்தினவேல் ஆகியோரின் சகோதரரும், டாக்டர் ஸ்ரீதரன் (யூ. எஸ். ஏ), டாக்டர் திருமதி நளாயினி ஞானதேவன் (லங்கா வைத்தியசாலை, கொழும்பு), தங்கரத்தினவேல் (பகுப்பாய்வாளர் திணைக்களம், கொழும்பு), டாக்டர் திருமதி அனுஷா ஸ்ரீதரன் (யூ. எஸ். ஏ.) ஞானதேவன் (கொழும்பு கொமேஷல் கம்பனி) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr. திருமதி குலசேகரம்

இல. 27, நல்லூர் குறுக்குத்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(19159)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 12 - 1991 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org